# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

லூர்து மேரி, மேரி செசரியா- சென்னை, வில்சன் மேரி,ரூபெல்லா மேரி , ஜோஸ்பிட்டா மேரி, விர்ஜின்- திருச்சி,ஜெயசேகரி -கொடைக்கானல், ஜெரின் மேரி, ஸ்டெல்லா ரோஸ் - திண்டுக்கல், லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், டோனெட்டல்லா அனஸ்தாசியாள், அனன்சியா மேரி, லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, டோம்னா மேரி, பிலோமினாள், பவுலின் மேரி - கும்பகோணம், ஜான்சி மேரி, இரஞ்சிதம், லில்லி இஸபெல்லா மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், ஆக்னஸ் ரோசாள் மேரி, அர்மெல்லா - கன்னியாகுமரி, புஷ்ப மேரி - சிவகங்கை, பிரேமா - நெல்லை, வித்யா மேரி, லோரா மேரி- தூத்துக்குடி, சகாயம் - கடலூர்.

### பொதுநிலையினர்

பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா, ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா,மேரி மார்கிரேட், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; புஷ்பக்கண்ணு, மிக்கேல் சாமி - கோயம்பத்தூர், -சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், வியாகுல மேரி, ஜெயராஜ்-சென்னை, மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி, *இருதய விஜில்லா* - திண்டுக்கல், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மரிய பிரகாசம் - தர்மபுரி, ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், தென்னரசு - தூத்துக்குடி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. இரஞ்சிதம் - மதுரை**
**திரு. பிரான்சிஸ் பேசில் - திருச்சி**

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**








# அறிவிப்பு

## பதிப்பாசிரியர் பக்கம்


ரு.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியாவின் பக்தர்களே, நமது திருவிவிலியத்தில் அறிவிப்பு என்பது மிக முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கின்றது. பழைய ஏற்பாட்டில் ஆதிப்பெற்றோரின் பாவத்திற்கு பிறகு மக்கள் அனைவரையும் பாவத்தில் இருந்து மீட்க ஒரு மீட்பர் வருவார் என்று அறிவிக்கப்படுகிறது. அன்றுமுதல் பல்வேறு காலக்கட்டங்களில் இஸ்ரயேல் மக்களுக்கு பல்வேறு அறிவிப்புக்களை கடவுள் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருந்திருக்கின்றார். அவர் கொடுத்த அறிவிப்புகளில் மிக முத்தாய்ப்பான, மகிழ்ச்சியான அறிவிப்பு என்னவென்றால் அன்னை மரியாளுக்கு கபிரியேல் தூதர் கொடுத்த அறிவிப்புதான்.

அறிவிப்பு என்று வரும்போது ஒருசில அறிவிப்புகள் எச்சரிக்கை கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஒருசில அறிவிப்புக்கள் துக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் இன்னும் சில அறிவிப்புக்கள் மட்டும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். திருவிவிலியத்தில் பல நிகழ்வுகள் எச்சரிக்கை கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. அதில் மிக முக்கியமானது என்னவென்றால் மோசே மூலமாக கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு கொடுத்த அறிவிப்பு. மக்கள் அனைவரும் கடவுளை மறந்துவிட்டு வேற்று தெய்வங்களை வழிபட ஆரம்பித்த நேரம், மக்கள் அனைவரும் பொன்னால் ஆன கன்றுக்குட்டியை செய்து அதனைக் கடவுளாக வழிபட்ட நேரத்தில் மக்களுக்கு கடவுள் எச்சரிக்கை



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
உறவுகளின் அடையாளமாகத் திகழ்ந்த மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
அன்பே மனிதம் - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மாதா மன்றாட்டு மாலை - 25
பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் - 28
அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

அறிவிப்பை கொள்ளிவாய் பாம்புகள் மூலம் கொடுக்கின்றார். மக்கள் தங்கள் பாவத்தை விட்டு விலகியவுடன் மோசே மூலமாக வெண்கலப் பாம்பினை உயர்த்திப் பிடித்து மக்கள் அனைவரையும் காப்பாற்றுகின்றார்.

அதேக் கடவுள் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்களுக்கு துக்கத்தின் அறிவிப்பைக் கொடுக்கின்றார். அந்தத் துக்கத்தின் அறிவிப்பை நினிவே நகர மக்களுக்கு இறைவாக்கினர் யோவேல் மூலமாக கொடுக்கின்றார். அந்த துக்கத்தின் செய்தி என்னவென்றால் இன்னும் சிறிது காலத்தில் இந்த நினிவே நகர் முழுவதும் அழிக்கப்படும் என்ற செய்திதான். அந்தச் செய்தியை நினிவே நகர மக்கள் புறந்தள்ளவில்லை. அதை முக்கிய அறிவிப்பாக எடுத்து தங்கள் வாழ்க்கை முறையை மாற்ற ஆரம்பிக்கின்றார்கள். கடவுளும் தன்னுடைய முடிவை மாற்றுகின்றார். அந்த மக்களை அவர் அழிக்கவில்லை. இவ்வாறு பல்வேறு அறிவிப்புக்களை கடவுள் பல்வேறு இறைவாக்கினர்கள் மூலமாக பல்வேறு நீதித்தலைவர்கள் மூலமாக கொடுத்திருக்கின்றார். அவர் கொடுத்த அறிவிப்புக்கள் பெரும்பாலும் மனிதர்கள் மூலமாகதான். ஆனால் அன்னை மரியாளுக்கு அவர் கொடுத்த அறிவிப்பு மனிதர்கள் மூலமாக கிடையாது. மனிதர்களுக்கு சற்றே மேலான வானதூதர்கள் மூலமாக கொடுக்கின்றார்.

மீட்பின் வரலாற்றில் எத்தனையோ அறிவிப்புக்களை கடவுள் மனிதர்கள் மூலமாகதான் கொடுத்திருக்கின்றார். அப்படியிருக்க அன்னை மரியாளுக்கு மட்டும் ஏன் வானதூதர் மூலமாக கொடுக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்த்தோம் என்றால் இதுவரை கடவுள் எத்தனையோ அறிவிப்புக்கள் கொடுத்திருந்தாலும் எல்லா அறிவிப்புக்களும் மீட்பரின் வருகைக்கான ஆயத்த அறிவிப்புக்களாகத்தான் இருந்திருக்கின்றன. ஆனால் அன்னை மரியாளுக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்புதான் மீட்பரையே உலகுக்கு கொடுக்கக் கூடிய அறிவிப்பாக இருக்கின்றது. இந்த அறிவிப்பு ஒரு மகிழ்ச்சியின் அறிவிப்பாக இருந்தாலும், அது ஒரு சில குழப்பங்களை அன்னை மரியாவின் வாழ்க்கையில் ஏற்படுத்தாமலும் இல்லை. உலக மக்கள் அனைவரும் இந்த மீட்பருக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தார்கள். அதனால் அவர்களுக்கு அன்னை மரியாளுக்கு சொல்லப்பட்ட அறிவிப்பு மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற அறிவிப்பாக இருந்திருக்கும். ஆனால் அன்னை மரியாளுக்கு இந்த அறிவிப்பு நிச்சயம் பல குழப்பங்களைக் கொடுத்த அறிவிப்பாகதான் இருந்தது. அதனால்தான் அன்னை மரியாள் கபிரியேல் தூதரிடம் ஒரு கேள்விக் கேட்கின்றார்? அது எவ்வாறு நிகழும்? நான் கன்னி ஆயிற்றே.

இந்தக் கேள்வி ஒரு சாதாரணக் கேள்வி அல்ல, யூதக் கலாச்சார சட்டத்திட்டத்தை அறிந்து அதைக் கடைபிடிக்கின்ற ஒருவரால்தான் அந்தக் கேள்வியைக் கேட்க முடியும். அதுவும் கபிரியேல் தூதரின் அந்த அறிவிப்பு சாவைத் தொட்டுப் பார்க்கின்ற ஒரு அறிவிப்பாக இருக்கின்றது. ஒருவேளை திருமணத்திற்கு முன்னால் அன்னை மரியாள் கருவுற்றிருப்பது யூத சமுதாயத்திற்கு தெரிய வந்தால் சாவு நிச்சயம் அதுவும் மிகவும் கொடூரமான சாவுதான் கிடைக்கும், எல்லாருக்கும் முன்பாக கல்லால் எறிந்துக் கொல்வார்கள். தெரிந்தும் கேள்விகளின் பதிலில் தெளிவுற்றவராய் அன்னை மரியாள் அந்தக் கேள்விக்கு ஆம் என்று பதில் கூறுகின்றார். குழப்பமான மனநிலையில் இருந்து தெளிவு பெற்று மீட்பின் திட்டத்தில் மகிழ்ச்சி அடைகின்றார்.

**அன்னை பெற்றது அறிவிப்பு**
**மக்கள் அடைந்தது மீட்பு**





பெறுவதற்கு முன்பாக அது ஒரு கடினமான சூழ்நிலையில் இருந்தது. ஆனால் கடவுளிடம் அவளும் நானும் வேண்டினோம் சுகப்பிரசவம் ஆக வேண்டும் என்று. அதேபோல் அக்டோபர் 13-ம் தேதி சுகப்பிரசவம் ஆனது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஆனந்த பாபு – வேங்கைவாசல்**

நான் 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் இங்கு வந்து அழுது ஜெபித்தேன் எனக்கு குழந்தை இல்லை என்று. இங்கு வந்த இரண்டு வாரங்களில் என்னுடைய மனைவி கருவுற்றாள். இப்போது ஒரு அழகிய குழந்தை இருக்கிறது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜெயக்குமார் - திருநெல்வேலி**

கடந்த மாதம் எனது நண்பர் ஜெயசுதன் இங்கு வந்து எனக்காக சாட்சி சொன்னார் என்னால் வரமுடியவில்லை. நான் சவுதி அரேபியாவில் வேலை செய்து கொண்டு இருந்தேன். சில பிரச்சனைகள் காரணமாக நான் வேலையை விட்டு இங்கு வரவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இங்கு வந்து என்ன வேலை செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியவில்லை. எனது நண்பன் எனக்கு ஒரு வேலை ஏற்படுத்திக் கொடுத்து இப்போது என் வேலையில் நல்ல பலனும், வேலையும் மேன்மைப்பட்டுள்ளது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**மகிமை ராணி - சோழிங்கநல்லூர்**

என்னுடைய தங்கைக்கு சிறுகுடலில் கட்டி இருந்தது. ஆதலால் அவளுக்கு வலி அதிகமாகவே இருந்தது. மருத்துவர்களிடம் சென்று பார்த்தபோது இது ஒரு ஆபத்தான நிலை, இரத்த ஓட்டம் குறைவாக இருக்கின்றது. அவர்களால் மூச்சுக்கூட விடமுடியவில்லை, 20 சதவீதம்தான் எங்களால் காப்பாற்ற முடியும் என்று சொன்னார்கள். அதற்கு பிறகு இரண்டு நாட்களில் கட்டி வெடித்து விட்டது. அதன்பின்பு மருத்துவமனையில் சேர்த்தோம். அறுவை சிகிச்சைக்குப் பிறகு நன்றாக இருக்கின்றார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ராணி - சோழிங்கநல்லூர்**

என்னுடைய பேரனுக்கு படிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. கடந்த ஆண்டு 11-ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கின்றபோது கைபேசிக்கு மிகவும் அடிமையாகி விட்டான். ஆதலால்தான் படிப்பில் மதிப்பெண்கள் அதிகமாக கிடைக்கவில்லை. அதனால் ஆசிரியர்கள் பெற்றோரிடம் சொன்னார்கள். அதன்பின் நான் ஜீவ அன்னையிடம் ஜெபித்தேன். அவன் படிப்பில் நல்ல அறிவுத்திறனும் ஞானத்தையும் கொடுங்கள் என்று. இப்பொழுது நடைபெற்ற தேர்வில் யாருமே அவனிடம் படி என்று சொல்லவில்லை, ஆனால் காலையில் எழுந்து படித்து தேர்வில் அதிக சதவீதம் மதிப்பெண்கள் பெற்று இருக்கிறான். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**அந்தோணி – வேளச்சேரி**

எனது பேத்தி திருமணமாகி மூன்று மாதத்தில் கருவுற்றாள். ஆனால் அந்த கரு குழாயில் கட்டி இருந்ததால் குழந்தை பெற முடியவில்லை. 2024-ம் ஆண்டு ஜனவரி 8-ம் தேதி நான் இங்கு வந்து அழுது ஜெபித்தேன், சில மாதங்களில் கருவுற்றாள், ஆனால் குழந்தை





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



## தெளிந்த பார்வை

திருமணமான புது தம்பதியர் ஒரு புதிய அப்பார்ட்மென்டில் வசிக்க சென்றனர். அவர்களுக்கு அங்கு வசிப்பது மிகவும் பிடித்திருந்தது. ஒருநாள் காலையில் உணவு (டிபன்) சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது அந்தப் பெண் வெளியே பார்த்தாள். பார்த்துவிட்டு தன் கணவனிடம் அங்கே பாருங்கள் ஒரு பெண் துணி துவைத்து விட்டு வெளியே காயப் போடுகிறாள். அந்த துணிகள் இன்னும் அழுக்காகதான் இருக்கிறது. அவளுக்கு துணி துவைக்ககூட தெரியவில்லை என்று புலம்பினாள். கணவர் அமைதியாகவே இருந்தார். ஒவ்வொரு நாளும் பக்கத்து வீட்டுப் பெண் துணியை காயப்போடும்போது இதே வார்த்தைகளைக் கூறி புலம்புவார். ஒருமாத காலம் கழிந்த பிறகு ஒரு மாற்றம் தெரிந்தது. பக்கத்து வீட்டுப் பெண் காயப்போடும் துணிகள் அனைத்தும் பளபளவென இருந்தது. தன் கணவனை கூப்பிட்டு பாருங்கள் இப்போது நன்றாக துவைக்க கற்று விட்டாள், யாரோ அந்தப் பெண்ணிற்கு அறிவுரைகள் கூறியிருக்கின்றார்கள். அதற்கு கணவன் அறிவுரைகள் ஒன்றும் இல்லை, நான்தான் காலையில் எழுந்து நம் வீட்டு ஜன்னல் கண்ணாடியை துடைத்தேன், ஆகவே நம் கண்களுக்கு அனைத்தும் சுத்தமாக தெரிகிறது என்றார். பல நேரங்களில் சாயம் பூசப்பட்ட கண்களோடு நம்மோடு வாழும் மனிதர்களை பார்க்கிறோம். ஆகவேதான், பிறரிடம் இருக்கும் சிறுபுள்ளிகூட நமக்கு கரும்புள்ளியாக தோன்றும்.

அன்னை மரியாள் தெளிந்த பார்வை கொண்டவர். தன் வாழ்வில் எதையும் குறையாக கூறவில்லை, யார் மீதும் குற்றம் சுமத்தவில்லை. யோவான் 2:3, கானாவூர் திருமண விழாவில் ஒரு குறையை நிறைவானதாக மாற்றுகிறார். ஒருவரை தலைகுனிய விடாமல் பெருமை சேர்க்கிறார் அன்னை மரியா. நாம், கோபம், பொறாமை, ஏமாற்றம், வெறுப்பு போன்ற வண்ணங்களால் சாயம் பூசப்பட்ட கண்களால் பிறரை மதிப்பீடு செய்கிறோம். ஆகவே நம்முடைய அகக்கண்களை தூய்மைப்படுத்துவோம், தெளிந்த பார்வையை நமதாக்குவோம். அப்போதுதான் இந்த உலகம் இன்னும் அழகானதாக தெரியும்.

# உறவுகளின் அடையாளமாகத் திகழ்ந்த மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

நாம் உடலிலும் உள்ளத்திலும் நலமுடனும் மகிழ்வுடனும் வாழ்வதற்கு உறவுகள் இன்யறியமையாதவை. உறவுகள் இல்லாத இதயத்தில் மகிழ்ச்சி இல்லை. அமைதி இல்லை. ஒற்றுமை இல்லை. எங்கும் சோகமே மலிந்து காணப்படும். மார்ச் மாதத்தில் இரு முக்கிய விழாக்களைக் கொண்டாடுகிறோம். தவக்காலமும் பிறக்கின்றது. புனித வளனார் கன்னிமரியாவின் கணவர் என்பதை தாய்த் திருஅவை மகிழ்ந்து கொண்டாடுகின்றது. இரண்டாவதாக, இயேசுவின் பிறப்பின் அறிவிப்பு என்ற இயேசுவின் மனித அவதார நிகழ்வின் தொடக்கத்தை மிகச் சிறப்பாக இறைமக்கள் சிறப்பிக்கின்றனர். திருக்குடும்பம் மற்றும் மூவொரு இறைவனின் குடும்பத்தோடு அன்னை மரியாவின் நெருங்கிய பிணைப்பு ஆழ்ந்து தியானிக்கப்பட வேண்டியதொன்று. தந்தை, மகன், தூய ஆவியாரிடம் விளங்கும் ஒப்பற்ற அன்பும், உறவும், பகிர்வும் திருக்குடும்பத்தில் நிறைவாய்க் காணப்பட்டன. மரியும் சூசைத்தந்தையும் அதற்காக உழைத்தனர். சிறப்பாக மரியா மூவொரு இறைவன் உறையும் ஆலயமாகத் திகழ்ந்தார். புதிய எருசலேம் ஆலயமாக திருக்குடும்பம் விளங்கியது. தனது மகனையும் கணவரையும் மட்டுமல்ல, தன்னைச் சுற்றி வாழ்ந்த ஏழைகளோடும் உறவு கொண்டிருந்தார் மரியா. நாம் வாழும் சூழலில் உறவுகள் போற்றப்படுகின்றனவா என்ற கேள்விகள் நம்மில் எழும்புகின்றனவா? சுயநலம் என்ற போர்வைக்குள் நம்மைச் சுற்றி நான், எனது குடும்பம், எனது இனம், எனது சமயம் என்ற குறுகிய வட்டங்களுக்குள் நாம் பயணித்துக் கொண்டு இருக்கின்றோம். இத்தருணத்தில் மரியா நம் கண்களைத் திறக்கிறார். அவரிடம் விளங்கிய தாய் அன்பிலிருந்து ஊற்றெடுக்கும் உறவுகளை நாம் போற்றிப் பேணி வளர்க்க, அதனால் உருவாகும் இறையாட்சி சமூகம் மலர இக்கட்டுரை வழியாக அழைக்கின்றார். அவரின் அழைப்பினை ஏற்போம். உறவுகளின் பிறப்பிடமாகத் திகழ்வோம்.

## உறவுகளின் பிறப்பிடம் நாசரேத்து

உறவுகளின் சங்கமமாக மரியா விளங்கியதற்கு முக்கிய காரணம் அவர் பிறந்து வளர்ந்த ஊரான நாசரேத்து ஆகும். மிக எளிய கிராமம். நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வருமோ என்ற கேள்வி எழுந்த காலம். அக்காலத்தில் மிக அமைதியாக மலைகள் சூழ்ந்த அந்தக் கிராமத்தில் சாதாரணப் பெண்ணாக வாழ்க்கை நடத்தினார். மரியாவின் உறவுப் பயணத்தில் நாசரேத்து மிக முக்கியப் பங்கினை வகித்தது. குழந்தைப் பாக்கியம் இல்லாததால் அவருடைய பெற்றோர் செபத்திலும் தவத்திலும் முழுமையாக தங்களை ஈடுபடுத்தியதால் கிடைக்கப் பெற்ற அற்புதமான குழந்தை மரியா. பிறந்த ஊர் நாசரேத்து. ஆம். தொடக்கநிலைப் பாவமின்றி அமல உற்பவியாகப் பிறந்தார். யாரும் அவரைப் பார்த்திராதபடி, மாசு எதுவும் அணுகாதபடி மிகக் கவனமாக மூன்று வயது வரை தம் பெற்றோரின் அரவணைப்பில் இக்குழந்தை வளர்க்கப்பட்டது. எருசலேம் ஆலயத்தில் அர்ப்பணிக்கப்பட்ட சிறுமியாகவும் இளம்பெண்ணாகவும் முழுமையுடன் வாழ நாசரேத்தில் தயாரிக்கப்பட்டார். பெற்றோரின் பாசத்தோடு இறைபக்தியிலும் அறிவிலும் வளர்ந்தார்.

நேர்மையாளர் என்ற ஒரே சொல்லுக்கு உரிமையாளரான புனித வளனாரோடு திருமணம் ஒப்பந்தம் நடைபெற்றது. அந்நிலையில் தான் கடவுள் அனுப்பிய வானதூதரைச் சந்திக்கிறார். அந்த எளிய நாசரேத்து இல்லத்தில் விண்ணும் மண்ணும் சந்தித்தது. மெசியாவுக்குத் தாயாகும் பேற்றினை நாசரேத்தூர் இளம்பெண் மரியா பெற்றார். இறைவன் பணிவும் தாழ்ச்சியும்





பழங்களை நாங்கள் உண்ணலாம் ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக் கூடாது அதை தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள் என்று பதில் தருகிறார். அதற்கு சாத்தான் ஏவாளிடம் நீங்கள் சாகவே மாட்டீர்கள் என்று பொய் சொல்கிறது. இந்த உரையாடலில் சாத்தான் சொல்லுகிற எல்லாத்தையும் ஏவாள் கேட்கிறாள். சாத்தானின் பொய்மை நிறைந்த உரையாடலை தொடர்ந்து கேட்டதால் பழைய ஏவாள் அதற்கு உட்படுகிறார். கடவுள் சொன்ன உண்மையை நம்பாமல் சாத்தானின் கவர்ச்சி நிறைந்த பொய்மையில் அகப்பட்டுக் கொள்கிறார். அதன் விளைவாக ஏவாள் தீமையை பறித்து உண்டாள் தன் கணவனுக்கும் கொடுத்தார் அவனும் (தீமையை) உண்டான்.(தொ.நூ 3.6) இந்த பழைய ஏவாளின் ஒப்புதல் உடனடியாக நிகழாமல் உரையாடலுக்கு பிறகே நிகழ்கிறது என்று புனித அகஸ்டின் தெளிவுபடுத்துகிறார். பழைய ஏவாள் தனது ஒப்புதல் தருவதை புனித அகஸ்டின் தமது கற்பனை திறனோடு சேர்த்து கடவுளிடம் இருந்து பிரிந்து செல்ல ஒப்புதலை தந்துவிட்டார் எனச் சொல்கிறார். அவர் மனிதனை வெளியே துரத்தி விட்டார் என்ற இறைவார்த்தை கேட்பதற்கு மிக கடுமையாக இருந்தாலும் பழைய ஏவாளும் ஆதாமும் ஒப்புதலைக் கொடுத்தார்கள் என்று புனித அகஸ்டின் வெளிக் கொணர்கிறார்.

## உண்மையினால் தூண்டப்படும் அன்னை மரியா

பழைய ஏவாள் சாத்தானின் பொய்மையினால் தூண்டப்பட்டார். ஆனால் அன்னை மரியா உண்மையினால் தூண்டப்படுகிறார். அன்னை மரியா நேரம் எடுத்துக் கொண்டார் என்று விரித்துரைக்கிறார். நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று அன்னை மரியா தனது ஒப்புதலை தெரிவிக்க நேரம் எடுத்துக் கொண்டார். அதற்கு காரணமாக இருப்பது இறைவார்த்தையேதான் என்று புனித அகஸ்டின் தெளிவுபடுத்துகிறார். மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்(2:19) என்ற இறைவார்த்தையை மேற்கோள்காட்டி அன்னை மரியா ஆழ்ந்து சிந்தித்து இறைவார்த்தையை தியானித்து ஒப்புதல் தர நேரம் எடுத்துக் கொண்டார் எனக் கூறுகிறார். பழைய ஏவாள் தனது ஒப்புதலால் சாலை பரிசளித்தார் ஆனால் அன்னை மரியாள் தனது ஒப்புதலால் வாழ்வின் ஊற்றாகிய இயேசுவை கருதரித்தார் உலகிற்கு கொடுத்தார். அன்னை மரியாவுக்கும் வானத் தூதருக்கும் இடையே நடந்த இறைவார்த்தை உரையாடல் உண்மையின் உரையாடல். இந்த உண்மையின் உரையாடலை வெறுமனே உதட்டளவில் நின்று பதில் தராமல், அன்னை மரியே தமது உள்ளத்திற்கு எடுத்துச் சென்று ஆழ்ந்து சிந்தித்து ஒப்புதல் தருகிறார். நாமும் தமது வாழ்வில் ஒப்புதலை தரும்போது உடனே உதட்டளவில் நின்று செயல்படாமல் உள்ளத்திற்கு எடுத்துச் சென்று சிந்தித்து செயல்படுவோம். அன்னை மரியா நமது அருகில் இருந்து நாம் சிந்தித்து செயல்பட உடனிருப்பாராக.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

17



அன்னை மரியா, தமது நம்பிக்கையிலும், அருள் நிறை வாழ்விலும் முழுமையாக வாழ்ந்தார் என்பதைப் பற்றி சென்ற மாத இதழில் பார்த்தோம். கடந்த இரண்டு மூன்று மாதங்களாக புனித அகஸ்டினின் பார்வையில் லூக்கா நற்செய்தியில் வரும் இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு பகுதியை பற்றி பார்த்துக் கொண்டு வருகிறோம். இந்த மாதமும் அன்னை மரியா எவ்வாறு தமது ஒப்புதலை கொடுத்தார் என்பதைப் பற்றி சிந்திப்போம்.

**அன்னை மரியாவின் ஒப்புதல்**

லூக்கா நற்செய்தியில் அன்னை மரியாவுக்கென்று சிறப்பான பகுதி இந்த இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு (1:26-38) பகுதியும் மரியாவின் பாடலும் (1:46-55)தான் என்பது புனித அகஸ்டின் தெளிவுபடுத்துகிறார். இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு பகுதியில் வானதூதர் இரண்டு முறை அன்னை மரியாவின் ஒப்புதலுக்கு காத்திருந்ததாக எடுத்துரைக்கிறார். இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார் (1:24) அதற்கு மரியா வானதூதரிடம் இது எப்படி நிகழும் நான் கன்னி ஆயிற்றே (1:34) என்ற இந்த இரண்டு இறைவார்த்தையிலுமே அன்னை மரியா தமது தயக்கத்தை தெரிவிப்பதுபோல நமக்கு தோன்றலாம். ஆனால் புனித அகஸ்டின் அன்னை மரியா இறைவார்த்தை கேட்க நேரம் எடுத்துக் கொண்டார் என்று நேர்மறை சிந்தனையை நமக்கு ஊட்டுகிறார்.

**பழைய ஏவாளின் ஒப்புதல்**

பழைய ஏவாளின் ஒப்புதல் எப்படி புதிய ஏவாளாகிய அன்னை மரியாவின் ஒப்புதலோடு பொருந்தவில்லை என்று பார்ப்போம். பாம்பின் உருவில் வந்த சாத்தான் (தொ.நூ 3:1) பழைய ஏவாளிடம் உரையாடலை தொடங்குகிறது. தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம் (தொ. 2,16) என்ற இறைவார்த்தையை சாத்தான் மாற்றி கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக் கூடாது என்றது உண்மையா? என்று கேட்கிறது. பொய் சொல்லி அதை உண்மையா என்று கேட்கிறது.

நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய் (தொ.நூ 2:17) என்ற இறைவார்த்தையை பழைய ஏவாள் மேற்கோள்காட்டி பாம்பிடம் தோட்டத்தில் இருக்கும் மரங்களின்





நிறைந்த உள்ளத்தை விரும்புகிறார். அங்குதான் தமது அருளை நிறைவாய்ப் பொழிய ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கின்றார். இறைவனின் செய்தியை வானதூதர் மூலம் கேட்டார். அதற்குரிய பதிலையும் அவர் வழியாகவே இறைவனிடம் உரைத்தார். தான் இறைவனால் அதிகம் நேசிக்கப்படுவதை உணர்ந்தார். தன் வயிற்றில் வளரும் இறைமகனை பயபக்தியோடு வளர்த்தெடுத்தார். இயேசுவுக்கு முப்பது வயது ஆகும் வரை நாசரேத்து திருக்குடும்பத்தில் புனித வளனாரோடு வாழ்ந்த உறவு இன்றும் கத்தோலிக்கக் குடும்பங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது. உலக மீட்பரை இவ்வில்லம் உருவாக்கியது. பொதுவாழ்வைத் தொடங்குமுன்பே, நாசரேத்து தொழுகைக்கூடத்தில் இயேசு இறைவார்த்தையை வாசித்துத் தெளிவுபடுத்தினார். அனைத்தையும் குழந்தையாய் இருந்த போது தன் தாயிடமிருந்து கற்றுக் கொண்டார். உழைத்து உண்ண வேண்டும் என்று நியதியை தன் வளர்ப்புத் தந்தையிடமிருந்து வளர்த்துக் கொண்டார். இவ்விதமாக நாசரேத்தில் மரியாவின் வாழ்வு ஒரு உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக இருந்தது. இவ்வாறு மகிழ்வான, நலமான, அமைதியான சூழ்நிலையை உருவாக்கும் உறவின் பிறப்பிடமாக நாசரேத்து மிளிர்ந்தது.

**உறவுத் தோழமையின் விரிவாக்கம்**

மரியாவின் உறவு இறைவனோடும் தனது திருக்குடும்பத்தோடும் மட்டும் நின்றுவிடவில்லை. தேவையில் இருப்போர், ஏழைகள், முதுமையில் இருப்போர் அனைவரிடமும் அந்த உறவு நீண்டு சென்றது. மங்கள வார்த்தை நிகழ்வுக்குப் பின் யூதேய நாட்டிற்கு எழுந்து விரைந்தார் என்று நற்செய்தியில் நாம் வாசிக்கின்றோம். முதுமை, இயலாமையில் இருந்த எலிசபெத்துக்கு உதவி செய்ய இயல்பாகச் சென்றார். எதையும் யோசிக்கவில்லை. உலக மீட்பர், ஏழைகளின் நண்பர், வாழ்வளிக்க வந்த வள்ளலின் தாய், தான் தாங்கியிருக்கும் கடவுள் மீது நம்பிக்கை கொண்டு விரைந்தார். மூன்று மாதங்கள் பணிவிடை செய்தார். காலத்தைக் கடத்தாமல், ஆவியாரின் குரலுக்கு உடனே செவிமடுப்பது, நீண்ட தூரத்தைப் பற்றி மனக்கணக்கு இன்றி முடிவு எடுத்தது, அடுத்தவரிடம் ஆலோசனை பெறாது புறப்பட்டது நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கின்றது.

இயேசு தமது மலைப்பொழிவில் மற்றவரை மையப்படுத்திய வாழ்வு வாழவும், தேவையில் இருப்போருக்கு கடன் உதவி வழங்கவும், ஆடையைக்கூட அளிக்கவும் நம்மிடம் கேட்கின்றார். கிறிஸ்தவர்களின் பண்பே பிறருக்கு உதவி செய்வது. ஏனெனில், ஏழை எளியோர், தேவையில் இருப்போரின் விருப்பங்களை நிறைவேற்றும்போது நாம் இறைவனுக்கே கடன் கொடுக்கின்றோம். இயேசுவுக்கே அதைச் செய்கிறோம் என்ற நம்பிக்கை நம்மில் வளர்கிறது. நம்பிக்கை ஆண்டு வலியுறுத்துவது போல உலகளாவிய சகோதரத்துவம், ஏழை எளியவரோடு தோழமை உறவுகளை எவ்வாறு வளர்த்துக் கொள்வது? நாம் வாழ்கின்ற தெரு, அன்பியம், பங்கு, ஊர் என்று ஒரு சிறிய புள்ளியில் நாம் தொடங்கும் உறவுகள் உலகளாவிய அன்புறவிற்கு வழிவகுக்கும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். இன்று முதுமை, நோய் இவற்றின் காரணமாக முதியோர் இல்லங்களில், மருத்துவமனைகளில் ஏன் நமது இல்லங்களில் தனிமையில் வாடுவோர், உடல், உள்ள வேதனையில் இருப்போருக்கு இத்தவக்காலத்தில் பணிபுரிய நல்ல மனதைக் காட்டுவோம். சிலுவைப்பாதைகள், ஒருசந்தி என்று நாம் மேற்கொள்ளும் பக்தி முயற்சிகள், இரக்கச் செயல்களிலும் இறங்க நம்மை அழைத்துச் செல்லட்டும்.

தம் மகனோடு கானாவூர்த் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தாலும் அவர் விருந்தினராக அந்த ஏழைத் திருமண வீட்டில் செயல்படவில்லை. மாறாக, இயேசுவின் பிரசன்னம் மக்கள் கூட்டத்தை அதிகரிக்க, மரியாவின் எண்ணம் இரசத்தைப் பற்றியதாக இருக்கிறது. அவர் எதிர்பார்த்தபடியே பற்றாக்குறை ஏற்பட, அதை நிவர்த்தி செய்ய விரைந்தார். யாரிடமும் ஆலோசனை கேட்கவில்லை. மகனிடம் செல் என்ற ஆவியாரின் குரலைக் கேட்கின்றார். ஒரே வார்த்தையில் தேவையை எடுத்துச் சொல்கிறார், ‘இரசம் தீர்ந்துவிட்டது”. மகனுடைய பதிலுக்கு அவர் மறுபதில் சொல்லவில்லை. மாறாக, அங்கு நின்ற பணியாளர்களிடம் ‘அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்று கூறிவிட்டுச் செல்கிறார். வாழ்க்கையில் உடனடித் தீர்வுகள் சில சமயங்களில் தேவைப்படுகிறது. குறிப்பறிந்து உதவி

செய்து விபத்திலிருந்து உயிர்களைக் காப்பாற்ற வேண்டும். ஆறுதலான, கனிவான உற்சாகமூட்டும் வார்த்தைகளால் உயிரை மாய்க்க முயலும் நமது சகோதர சகோதரிகளைக் காப்பாற்றலாம். இங்கு மரியா நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றார். தேவை என்று வரும்போது நாம் ஆள், இடம், காலம் பாராது உதவி புரிய வேண்டும் என்று அன்னை நமக்கு அறிவுறுத்துகிறார். இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் மரியாவின் உறவின் ஆழம். தாய்க்குரிய அன்பினால் அவர் உறவுப் பின்னல்களை ஏற்படுத்தியிருந்தார். நலமான உறவுகளைக் கட்டியெழுப்புவதில் ஆர்வம் காட்டுவோம்.

**சீடத்துவத்தில் மலர்ந்த உறவு**

இயேசுவை பின்பற்றிய சீடர்கள் அவரோடு போதிக்கவும் குணப்படுத்தவும் பேய்களை ஓட்டவும் பயணித்தனர். மரியா பெண்சீடர்களோடு தம்மை இணைத்துக் கொண்டார். அவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு இயேசுவுக்கும், சீடர்களுக்கும் உதவி புரிந்தனர் என்று லூக்கா தமது நற்செய்தியில் கூறுகின்றார். இந்தப் பெண்கள் இயேசுவினால் உடலிலும் உள்ளத்திலும் நலம் பெற்றவர்கள். அவர்களின் நல்மாதிரியான வாழ்வை அன்னை புரிந்துகொண்டு அவர்களைப் பெண் சீடராக்குகின்றார். இப்பெண்கள் இயேசுவிடமும் மரியாவிடமும் கொண்டிருந்த உறவை அறிந்து கொள்ள முடிகிறது. கல்வாரிமலை வரை இயேசுவைப் பின்பற்றினர். இறுதி அடக்கச் சடங்கை நிறைவேற்றினர். முழுமையாக அடக்கச் சடங்கினைச் செய்ய ஞாயிறு அதிகாலை கல்லறைக்கு விரைந்தனர். இப்பெண்களுக்குத் துணிவை ஊட்டியவர் மரியா. இவர்கள் அனைவரும் ஒரே மனமும் ஒரே இதயமும் கொண்டவர்களாய் தொடக்கக்காலத் திருஅவையைக் கட்டியெழுப்புவதில் தம் பெரும் பங்கினை அளித்தவர்கள்.

**நிறைவுரை**

உறவு வாழ்வின் பல பரிமாணங்கள் நம் தாய் மரியாவில் வெளிப்படுகின்றன. இறைவனிடமிருந்து வருகின்ற விருப்பங்களுக்கு எப்போதும் ஆம் என்று கூறுகின்றார். இறைவனின் தாயாகும் பேற்றினைப் பெற்றிருந்தாலும் நாசரேத் இல்லத்தைத் திருக்குடும்பமாக மாற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு கத்தோலிக்கக் குடும்பத்திற்கும் எடுத்துக்காட்டாக அதை ஆக்கிய ஒப்பற்ற உறவின் தலைவி அவர். மகனின் இன்பத்திலும் துன்பத்திலும் தோழமை உணர்வுடன் பயணித்ததால் நட்பு என்னும் உறவுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றார். அனைத்து சமயத்தையும் சார்ந்த மக்களுக்கு இன்றும் புதுமைகளை ஆற்றி உலக சகோதரத்துவத்தின் கதாநாயகியாகத் திகழ்கின்றார். கானாவூரில் ஏழைகள் மீது சிறப்புக் கவனம் செலுத்திய மரியா, தொடக்கக்கால நம்பிக்கையாளர்களின் மத்தியில் வறுமையுற்றோர் என்று எவருமே இல்லாதவாறு பகிர்வு மனப்பான்மையை அவர்களுக்கு வலியுறுத்தினார். இன்று நமது குடும்பங்களில் உறவுகளில் பிரச்சினைகளுக்குக் காரணம் வசதி படைத்தவர் இல்லாதவரோடு தம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து கொள்வதில்லை. உண்மையான உறவில், பகிர்தல் இடம்பெறுவதை உணர்த்தும் சமத்துவத் தாய் நம் மரியா. தவக்காலமும் நாம் கொண்டாட இருக்கும் இரு பெருவிழாக்களும் மனமாற்றத்திற்கும் உறவுக்கும் ஒன்றிப்பிற்கும் நம்மை அழைக்கின்றன. நமது திருவிழாக்கள் கோவிலோடு முடிந்துவிடுகின்றன. நற்கருணையே உறவின் விருந்து, உறவுகளின் கொண்டாட்டம். ஆனால், கொண்டாட்டம் நிறைவுற்ற பின் உறவுடன் ஒருவரையொருவர் ஏற்றுக்கொண்டு வாழ்வதில் பெரிய திண்டாட்டம் தான் காணப்படுகிறது. வழிபாடுகள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்பட வேண்டும். அப்போதுதான் அவைகள் உறவுகளுக்கு இட்டுச் செல்லும். இயேசுவின் பிறப்பு அறிவிப்பு நிகழ்வில், மூவொரு இறைவன் தன்னை வெளிப்படுத்தி அவரிடம் விளங்கும் உறவின் முக்கிய அம்சங்களான ஒற்றுமை, அன்பு, பகிர்வு அனைத்தையும் நாம் பின்பற்ற நம்மை அழைக்கின்றார். மூவொரு இறைவன் உறையும் திருக்கோவிலான மரியா அதைத் தன் வாழ்வில் முழுமையாகக் கடைப்பிடித்தார். நாமும் அத்தகைய வாழ்வு வாழ நம்மைத் தூண்டுகிறார். ‘அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்’’ என்ற அவரின் வேண்டுகோளை இத்தவக்காலத்தில் முழுமையாக நிறைவேற்றுவோம். ‘எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக’’ என்பதே அவர் நமக்குச் சொல்வது. இயேசுவின் விருப்பமே மரியாவின் விருப்பமாகும். இதை உணர்ந்தவர்களாய் தொடர்வோம் நமது உறவுப் பயணத்தை!





மேலும் இறையருளானது அவர்களின் வேதனைகளின் உக்கிரத்தை தணித்தது. அதனாலேயே மிகக் கொடிய வேதனைகளின் நடுவே மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்து வந்தனர். அன்னை மரியாவின் ஆன்மாவோ வியாகுலம் என்னும் வாளால் ஊடுருவப்பட்டது. அதை தணிக்க எவ்வித ஆறுதலும் இல்லை. என்ன குரூரமான வேதனை! தன் மகன் தன் கண்முன் உயிர்விடுவதை காணும் தாய் மிகுந்த வேதனை அனுபவிப்பாளானால், அன்னை மரியாள் எத்தனை வேதனை அனுபவித்திருப்பாள் என்பதை நம்மால் சிந்திக்கவும் நினைக்கவும் இயலாததாய் இருக்கிறது. ‘மகள் சீயோனே! கன்னிப் பெண்ணே! யாருக்கு உன்னை இணையாக்கித் தேற்றுவேன் உன்னை? உன் காயம் கடலைப் போல் விரிந்துள்ளதே! உன்னை குணமாக்க யாரால் முடியும்? (புலம்:2:13)’ என்னும் இறைவார்த்தைகள் வியாகுலமாமரிக்கு எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளன.

**பொதுநிலையினர் பார்வையில் அன்னையின் ஐந்தாம் வியாகுலம்:**

சேசு சிலுவையில் அறையப்படுகிறதையும் உயிர் விடுகிறதையும் கண்ட அன்னை மரியாளின் வியாகுலம் எத்தகையது என்பதையும் தினந்தோறும் சிந்திப்போம். அன்னையின் வியாகுலங்களை மேலும் அதிக மாக்கியது என்னவென்றால், தன் திருமகனின் பாடுகளையும் மரணத்தையும் அலட்சியம் செய்து தங்களுக்கு வழங்கப்பட்ட மீட்பை பெற்றுக் கொள்ள மனமின்றி சாவான பாவம் செய்து நரகத்திற்கு தங்களையே தகுதியுடையவர்களாக மாறுகின்றவர்களைப் பற்றிய நினைவே ஆறுதல் வருவிக்க முடியாத பெருந்துயரமாயிருந்தது அன்னைக்கு! வியாகுல அன்னையை ஆறுதல் படுத்த நாம் என்ன செய்ய வெண்டும்? நல்ல உத்தம கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக வாழ வேண்டும். மேலும் அன்னையின் வியாகுலங்களை அடிக்கடி சிந்தித்து அவற்றிற்கு மகிமையாக ஒரு சில அருள்நிறை மந்திரங்களையாகிலும் பக்தியுடன் செபிக்க வேண்டும். அல்லது வியாகுல செபமாலையை நாள்தோறும் தியானித்து செபிப்பது, விரைவில் நம்மை உத்தம கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக வாழ வைக்கும் சிறந்த முயற்சியாகும்.

*‘வியாகுலங்களினால் நிறைந்த மரியாயே வாழ்க! சிலுவையில் அறையப்பட்டவர் உம்முடனே! பெண்களுக்குள் இரங்கத்தக்கவர் நீரே! உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசுவும் இரங்கத்தக்கவராமே!*

*புனித மரியாயே, சிலுவையில் அறையப்பட்டவருடைய மாதாவே, உம்முடைய மகனைச் சிலுவையிலறைந்த எங்களுக்கு, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் மனஸ்தாபக் கண்ணீர் சிந்தும் வரம் பெற்றுத் தந்தருளும், ஆமென்.’* என்ற எளிய செபத்தை ஒருநாளைக்குப் பலமுறை செபித்து வியாகுல அன்னையை நேசித்து ஆறுதல் படுத்துவோம். அன்னையின் தனிப்பட்ட பாதுகாப்பையும் அரவணைப்பையும் பெற்றுக் கொள்வோம்.

வியாகுல மரியே வாழ்க!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 5

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவின் நான்காம் வியாகுலத்தை, சேசு சிலுவை சுமந்து சென்ற போது அன்னை மரியா அவரை எதிர் கொண்டு சந்தித்த போது அடைந்த அளவில்லா வியாகுலங்களை குறித்து சிந்தித்த நாம் மாற்கு 15:24 இல் ‘அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்’ என்று கூறியுள்ள படி, சேசு சிலுவையில் அறையப்பட்ட போதும் சிலுவையில் உயிர்விடும் போதும் அன்னை மரியாள் அருகில் இருந்து இந்த துயரக்காட்சியை கண்டு துன்ப வெள்ளத்தில் அமிழ்ந்தி மிகுந்த வியாகுலங்கள் அனுபவித்ததை இப்போது ஆழ்ந்து தியானிப்போம்.

**அன்னையின் அளவிடமுடியாத ஐந்தாம் வியாகுலம்:**

சேசுநாதரை சிலுவையில் அறைவதற்காக சேவகர்கள் சிலுவையை தயார் செய்கிறார்கள். சேசு சேவகர்கள் சொன்னபடியே சிலுவையில் படுத்துக் கொண்டு தலையை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கிறார். தம் கரங்களையும் கால்களையும் நீட்டுகிறார். சேவகன் ஒருவன் சேசுவின் வலது கரத்தை சிலுவையில் சரியான இடத்தில் பொருத்தி ஆணியை வைத்து சுத்தியலால் அடிக்கிறான். காயத்திலிருந்து இரத்தம் பீறிட்டு வெளியேறுகிறது. சேசு வேதனையில் துடிதுடித்து முனகுகிறார். அடுத்ததாக சேசுவின் இடது கரத்திலும் கால்களிலும் அணிகளால் அவ்வாறே அறைகிறார்கள். தன் தாயின் வேதனை அதிகமாகும் என்று உணர்ந்த சேசு அதற்கு மேல் தன் வேதனையை வெளிப்படுத்தாமல் அமைதியாயிருக்கிறார். வேதனை மிகுதியால் அவர் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தோடுகிறது.

சேசு சிலுவையில் கிடத்தப்படுவதையும் கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் அறையப்படுவதையும் சிலுவையுடன் அவர் உயர்த்தப்படுவதையும் மூன்று மணி நேரம் கொடிய மரண வேதனை அனுபவிப்பதையும் அன்னை மரியாள் பார்த்து உள்ளம் கலங்கி நின்றார்கள். அவருடன் இறக்க முடியாமல் அவர்கள் வேதனை பட்டார்கள். தன்னைக் கண்டு தன் திருமகன் பட்ட துன்பத்தை நினைத்து வருந்தினார்கள்.

**சிலுவையடியில் அன்னை மரியாள்:**

அன்னை மரியாள் பட்ட வேதனைகளுக்கு முன் வேதசாட்சிகள் அனுபவித்த வேதனைகள் எல்லாம் ஒன்றுமில்லாமைக்குச் சமம் என்று கூறலாம். வேதசாட்சிகள் உடலில் மாத்திரம் வேதனை அனுபவித்தார்கள்.





## அன்னையின் (75) திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



**புனித கிளமெண்ட் மரியின் ஊழியர் பேராலயம், சீயன்னா, இத்தாலி பகுதி 2**

கி.பி. 1533ஆம் ஆண்டு ஆகஸ்டு 18ஆம் தேதி ஆலயம் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது. ஆலயத்தின் முகப்பு தொஸ்கன் மாநில பாரம்பரியத்தின்படி எளிய முறையில் அலங்காரங்கள் இன்றி அமைக்கப்பட்டுள்ளது.

பதினாறாம் நூற்றாண்டில் பரோக் கட்டிட கலையில் ஆலயத்தின் இருபுறமுள்ள பகுதிகள் சிற்றாலயங்களுடன் கட்டப்பட்டன. கி.பி. 1750ஆம் ஆண்டு ஆலயத்தின் முன்உள்ள படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன.

பதினாங்காம் நூற்றாண்டில் உரோமை கட்டிட கலையில் ஆலயமணி கோபுரமானது கட்டப்பட்டது. வரலாற்றில் பலமுறை புதுப்பிக்கப்பட்டதோடு, கி.பி 1926ஆம் ஆண்டு ஆலயமானது முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது. ஆலயத்தில் மையப்பகுதியும், ஆலயமணிக் கோபுரத்தின் உச்சியும் முழுமையாக புதுப்பிக்கப்பட்டு, சீயன்னா மறைமாவட்ட பேராலயத்திற்கு ஒத்த பெருமையை இப்பேராயலம் அடைந்துள்ளது.

இப்பேராலயத்தின் மற்றொரு பெருமை, இந்த ஆலயத்தில் உள்ள அன்னையின் ஓவியங்களாகும். எகிப்திய சிலுவை வடிவில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் இருபுறமுள்ள சிற்றாலங்களை அன்னையின் ஓவிங்கள் அலங்கரிக்கின்றன.

வலது புறமுள்ள முதல் சிற்றாலயத்தில், உத்தரிக்க ஸ்தலத்தில் உள்ள ஆன்மாக்களை விடுவிக்கும் அன்னையின் திருஉருவமானது வரையப்பட்டுள்ளது. பதிமூன்றாம் நூற்றாண்டை சார்ந்த இந்த ஓவியத்தை வரைந்தவர் யார் என்பது இதுவரை யாருக்கும் தெரியாது.

இரண்டாம் ஆலயத்தில் உள்ள போத்ரோனோ அன்னையின் ஓவியமானது, கி.பி. 1251ஆம் ஆண்டு மார்கோவால்தோவை சார்ந்த கோப்போ என்பவரால் வரையப்பட்டது. அந்த ஆண்டில் நடைபெற்ற போரில் கைதியாக சிறைபிடிக்கப்பட்டவர் கோப்போ ஆவார். தன்னுடைய

சிறை வாழ்வில் அன்னையின் ஓவியத்தை வரைந்து, அதன் வழியாக அவர் விடுவிக்கவும்பட்டார். இந்த அற்புதமான ஓவியத்தில் உள்ள அன்னையின் திருவதமானது பின்னாளில் போனிபோசெய்னாவைச் சார்ந்த தூச்சியோ என்பவரால் அழகுபடுத்தப்பட்டது.



மூன்றாம் ஆலயத்தில் ருத்திலோ மனேத்தி என்பவரால் அன்னையின் பிறப்பு நிகழ்வானது வரையப்பட்டுள்ளது. நான்காம் ஆலயத்தில் அலெஸான்த்ரோ பிரான்கியால் அன்னை மரியாவும், மரியின் ஊழியர் சபையின் முதல் ஏழுபுனிதர்களும் என்கிற ஓவியம் வரையப்பட்டுள்ளது. ஐந்தாம் ஆலயத்தின் மத்தேயு ஜியோவான்னி என்பவரால் வரையப்பட்ட இயேசுவின் பிறப்பின் போது மாசில்லா குழந்தைகள் கொலை செய்யப்பட்டது நினைவுகூறப்படுகிறது.



இடதுபுறமுள்ள முதல் ஆலயத்தில் அன்னைக்கு மங்கள வார்த்தை அறிவிக்கும் நிகழ்வானது பிரான்செஸ்போ வான்னி என்பவரால் வரையப்பட்டுள்ளது. இரண்டாம் ஆலயத்தில் பெல்லிச்சியோவை சார்ந்த ஜாக்கபோ என்பவரால் பெல்வெர்தே அன்னையின் திருஉருவம் வரையப்பட்டது. நான்காம் ஆலயத்தில் பிரான்செஸ்கோ குர்ராதியால் வரையப்பட்ட அன்னையும் புனிதர்களின் ஓவியமும், ஆலயத்தின் மேற்கூரையில் அலெஸாந்த்ரோ கசோலினி என்பவரால் வரையப்பட்ட இடையர்களின் ஆராதனை ஓவியமும் அழகுற வரையப்பட்டுள்ளன.





வேண்டும் என்பதாகும். இவ்வாறு மரியா பிரகாசமாய்த் துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிறார் என அறிகிறோம்.

அருள் மிகப் பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு என்னும் வானதூதரின் வார்த்தைகள் மரியாவின் உயர்நிலையை வெளிக்கொணரும் உன்னத வேதங்களாகும். இப்பூமியில் எவருக்கும் கிடைத்திடாத அரியவகை பாக்கியம் இது. மரியா தனது சிறப்பான அருள் நிலையில் பாவ நிலையில் இருந்து விடுபட்டிருக்கிறார் என திரிதெங்கு பொதுச் சங்கம் புகழாரம் சூட்டுகிறது. மரியாவின் அருள் நிலையைக் காட்டும் காரணங்கள் பல. ஜென்ம பாவமின்றி உலகில் உதயமானவள் மரியா. வாழ்வுதரும் வார்த்தையை தியானித்து வாழ்வாக்கியவர் மரியா. இயேசுவின் முதல் சீடத்தியாக இருந்து கோடானகோடி சீடர்களையும் பக்தர்களையும் இறைஊழியர்களையும் இறைவன்பால் ஈர்த்தவர் மரியா. என்றும் கன்னியாக இருந்து இறைமகிமையை உலகிற்கு பறைசாற்றியவர் மரியா. உடலோடும், ஆன்மாவோடும் பல வானதூதர்களின் ஆர்ப்பரிப்போடும் விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப் பெற்றவர் மரியா. இறைவனின் தாயாக மட்டுமல்லாமல் எல்லா மக்களின் தாயாக மாறி அவர்களை இடைவிடாது காத்து பராமரிக்கின்றவர் மரியா. இவ்வாறு இவ்வுலகில் பிறப்பெடுத்த எவருமே செய்ய இயலாத பல செயலை செய்தவர் மரியா. ஏனெனில் அவர் இறையருள் நிறைந்தவர், அளவு கடந்த அவரது அருளின் மேன்மையைப் போற்றித் திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் இவ்வாறு கூறுகின்றார். கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டுமென்றால் முதலில் மரியின் பக்தர்களாக மாற வேண்டும்.

ஆழியின் ஆழம், அகலம்கூட கண்டறியப்பட முடியும். ஆனால் அன்னையின் அருள் வெள்ளம் அளவிட முடியாது. தான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்பதற்கிணங்க தான் கொண்ட இறையருளையும் உயர் ஆசீரையும் உலகிற்கு மழையெனப் பொழிந்து, அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி ஒரு நிமிடம் மலைத்துப் போகச் செய்யும் அன்னை மரியா என்றும் போற்றப்பட, புகழப்பட வாழ்த்தப்பட வணங்கப்பட தகுதியானவரே. வானரசியான அன்னை மரியா பக்தி நாளுக்கு நாள் வளர்பிறையாகட்டும். கடவுளின் தாயான மரியாவின் புகழ் உலகெங்கும் எந்நாளும் பரவி பலரது கண்ணிரைத் துடைத்திடட்டும். கன்னித் தாயான அன்னை மரியாவின் பெயர் காலம் கடந்து சிறந்திடட்டும். அப்போது அன்னை மரியா வழியாக இறைவன் மாட்சி பெறுவர். நாமும் மீட்புப் பெறுவோம்.

தகுதியுடையவராயிருக்கிறார். இருப்பினும் கத்தோலிக்க திருச்சபை வழிபாட்டில் தந்தையாகிய இறைவனுக்கும் மகனுமாகிய இயேசுவுக்கும் தூயவராகிய ஆவியானவருக்கும் அளிக்கக் கூடிய வணக்கத்தை ஒப்பிட முடியாது. ஏனெனில் கடவுள் ஒருவரே. மரியாள் கடவுளின் படைப்பு. படைப்பு பொருட்களில் மிக சிறந்த உயர்ந்த படைப்பாதலால் அவருக்கென்று உரிய வணக்கம்தான் அளிக்கப்பட வேண்டுமே தவிர ஆண்டவருக்குரிய அந்தஸ்தை அன்னைக்கு அளிப்பது தவிர்க்கப்பட வேண்டும். இருப்பினும் மரியாவுக்குரிய வணக்கத்தை வளர்ப்பதில் திருச்சபை மிகுந்த சிரத்தை எடுத்து வருகிறது.

**மீட்புத் திட்டத்தில் அன்னையின் பங்கு**

திருத்தந்தை 10-ம் பத்திநாதர் தனது சுற்றுமடலில் இறையருளைப் பெற்றுத்தரும் ஊடகமாக மரியா திகழ்கிறார் என்றும் அடிப்படை இறையியல் உண்மையை எடுத்துக் காட்டுகிறார். இறையருளைக் கொடையாகப் பொழிவதில் இயேசுவுக்குத்தான் முழுஅதிகாரமும் உரிமையும் உண்டு என்பதை மறுத்துக்கூற இயலாத நிலையிலும் அவருடைய பாடுகளிலும் வேதனையிலும் பங்குகொண்டதன் வழியாக தனது மகனின் மீட்புத் திட்டத்தில் இணைந்து நடைபயிலும் அன்னை, மிக முக்கியமான சக்தி வாய்ந்த பரிந்துபேசும் பரலோக நாயகியாக கருதப்படுகிறார். நாம் மீட்புப் பெற அன்னை இறைவனிடம் வேண்டுவதை அவரது விண்ணேற்பு நிகழ்வு விளக்குகிறது என 2-ம் வத்திக்கான் திருச்சங்க ஏடு உரைக்கிறது. இவ்வாறு நம் மீட்பில் அக்கறை கொள்ளும் அன்னையின் மீது பக்திக் கொள்வதில் என்னத் தவறு?

**நமது தேவைகளுக்காக ஆண்டவரிடம் பரிந்துபேசும் பாங்கு**

தாயிற் சிறந்த கோவிலுமில்லை, அம்மா என்றழைக்காத உயிரில்லையே என்னும் பாடல் வரிகள், தாய்மையைத் தாலாட்டும் உயர் களஞ்சியங்களாகும். சாதாரணமாக ஒரு குடும்பத்தில் மகனோ, மகளோ தான் விரும்பிய ஒரு பொருளை பெற வேண்டுமாயின் நேரடியாக தந்தையை அணுகுவதில்லை. தாயின் வழியாகத்தான் அவ்விருப்பம் நிறைவேற்றப்படுகிறது. தாய் நமக்காகப் பரிந்து பேசும்போது தந்தை அதன் மேன்மையை அறிந்து கொள்கிறார். கானாவூர் திருமணம் அன்னையின் ஆழமான அன்பினை எடுத்துக் காட்டும் அழகான உண்மை. திராட்சை ரசம் தீர்ந்து விட்டது என அவ்வீட்டாருக்காக பரிந்து பேசுகிறார் மரியா. இயேசுவின் இறப்பு, உயிர்ப்புக்குப் பிறகும் அவரது பரிந்து பேசுதல் தொடர்கிறது.(திப 1.14)

இன்றும் நமக்காக பரிந்து பேசி நம்மை நலன்களாலும் வரங்களாலும் நிரப்பும் மரியாவுக்கு நன்றிப் பண் பாடுவது நமது கடமையல்லவா? மரியாவுக்கு நாம் கடன்பட்டவர்களாக வாழ்கிறோம் என்பதன் பொருள் அவருக்கு மதிப்பும், மரியாதையும் அளிக்க ஆகட்டும்







ஆலயத்தின் மையப்பகுதி மற்றும் அதன் வலப்புறமும், இடப்புறமும் உள்ள பகுதிகளில் ஏழு சிற்றாலயங்கள் உள்ளன. இச்சிற்றாலயங்களும் அன்னை மரியா மற்றும் புனிதர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் ஓவியங்கள் நிறைந்துள்ளன. ஆலயத்தின் மையப்பீடத்தில் சிலுவையில் தொங்கும் ஆண்டவரின் ஓவியம் நம் கண்களை கண்ணீரால் நிரப்புகிறது. இவ்வோவியத்தை நெகோரி நகர் யூகோலியோ என்பவர் கி.பி. 1331 ஆம் ஆண்டில் வரைந்துள்ளார்.

ஆலயத்தின் பண்டக அறையின் கதவுகளுக்கு மேல் பொனவெந்தூரால் வரையப்பட்டுள்ள அன்னையும் குழந்தையும் ஓவியம் அலங்கரிக்கிறது. வலது புறத்தில் உள்ள சிற்றாலயம் லிப்போ மெம்மியால் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் வரையப்பட்ட குழந்தை இயேசுவை கரங்களில் தாங்கியிருக்கும் புகழ்பெற்ற ஓவியம் உள்ளது.

இந்த ஆலயத்தின் மேற்கூரையில் இயேசுவுக்காக உயிர்நீத்த மாசில்லா குழந்தைகளின் படுகொலை நிகழ்வு தத்ரூபமாக பியத்ரோ லொரென்செத்தியால் வரையப்பட்டுள்ளது. இரண்டாவது ஆலயத்தை அலெஸாண்த்ரோ பிரன்சினியால் வரையப்பட்ட அமலற்போவ மாதா ஓவியம் அலங்கரிக்கிறது. மையத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் கி.பி. 1498 ஆண்டில் பெர்னார்தினோ புங்கியால் வரையப்பட்ட அன்னை மரியாவுக்கு மணிமுடி சூட்டப்படும் ஓவியமானது அணிசெய்கிறது. இடதுபுறத்தில் உள்ள முதல் ஆலயத்தில் ததேயு பர்தோலோவால் வரையப்பட்ட இடையர்களின் ஆராதனை ஓவியம் உள்ளது.






சிற்றாலய சுவர்களில் ஏரோதுவின் விருந்து, நற்செய்தியாளர் யோவானின் விண்ணேற்பு என பல ஓவியங்கள் காணப்படுகின்றன. கடைசியாக உள்ள ஆலயத்தில் இரக்கத்தின் அன்னையின் ஓவியமானது அன்னையின் பரிந்துரைகளை நமக்கு பெற்று தருவதாக அமைந்துள்ளது.

அருளின் காலமாம் யூபிலி ஆண்டைத் தொடங்கியிருக்கும் நாம், அன்னையை அன்பு செய்து, அவரில் இணைந்து வாழ்ந்த மக்களை போல் வாழ முயற்சிப்போம். அன்னையிடம் தஞ்சம் அடைந்தோர் ஒருபோதும் கைவிடப்படார் என்பது வாழ்க்கை நமக்கு தந்திருக்கிற பாடம். இதுவே நமது விசுவாசம். அனைவருக்கும் யூபிலி ஆண்டை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட செபங்களும், வாழ்த்துக்களும்.







# மாதா மன்றாட்டு மாலை

17



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

**பிரகாசமாய்த் துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே**

அன்னை மரியின் ஆசீர் தேடி ஆயிரமாயிரம் பக்தர்கள் பல கோவில்களுக்கும், திருத்தலங்களுக்கும், திருயாத்திரை செல்வது, வேண்டுதல் நிறைவேற்றுவது எனத் தங்களது ஆன்மீக வாழ்வினைச் சிறிது அழகுபடுத்திக் கொள்கிறார்கள். சாதி, சமய, இனம் கடந்து அனைவரும் அன்னையை நாடி வருவது, அவர் ஓர் அலங்காரச் சிலை என்பதற்காக அல்ல, அவர் ஒரு அதிசய திருஉருவம் என்பதற்காகவும் அல்ல, மாறாக, அதிசயங்கள் நிகழ்த்தும், ஆறுதல் அளிக்கும், அருளைப் பொழியும், அன்புச் சாரலால், அமுத சுரபியாய், அன்னை மரியா வீற்றிருக்கிறார் என்பதற்காக. இறைவனை நோக்கியே ஆன்மீகப் பயணத்தில் மக்களை நடத்திச் செல்லும் நடத்துநராக அவர் விளங்குகிறார் மீட்பு பணியில் தனது மகன் இயேசுவுக்குத் துணைநின்று, நம்மை மீட்டெடுப்பதில் முழு பங்கு ஆற்றுகின்றார். இவ்வாறு மக்களுக்காக மக்கள் நலனுக்காக, வளர்ச்சிக்காக பாடுபடும் தீமைகளோடு போராடும் அன்னை மரியா நிச்சயமாக மானுடத்தினால் பிரகாசமாய் துதிக்கப்பட யோக்கியமாய் இருக்கிற கன்னிகை ஆவார் என்பது எல்லோரும் அறிந்த நன்கு புரிந்த உண்மை.

**திருச்சபை தரும் விளக்கவுரை**

இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவள் என்பர்(லூக் 1,48). இத்தகைய பேறுதான் மரியா துதிக்கப்படத் தகுதியானவர் என்பதைக் குறித்துக் காட்டும் சான்று. திருச்சபையானது மரியாவுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பல பக்தி முறைகளையும் சிறப்பு வணக்கங்களையும் முன்னெடுத்து மக்களுக்கு கற்பிக்கிறது. தொடக்க காலத்திலிருந்தே இறைவனின் தாய் என்ற கோட்பாட்டை பிரகடனப்படுத்தி அதை பல சான்றுகளோடும் விளக்கங்களோடும் பிரகடனப்படுத்தி வருகிறது. மரியாவின் உண்மையான புனிதமிக்க தாய்மையைப் பற்றிய கோட்பாடு கிறிஸ்தவ கோட்பாடு என நெஸ்டோரியஸ்க்கு எபேசு திருச்சங்கம் வலியுறுத்தியது.

இத்தகைய பெருஞ்சிறப்பினைப் பெற்றிருக்கும் மரியா, அவரது பிள்ளைகளாகிய நம் அனைவராலும் போற்றப்பட புகழப்பட நிறைந்த



# முத்திப்பேறு உபால்தோ
(Blessed Ubaldo)



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

உபால்தோ, மரியின் ஊழியர் சபையின் ஆரம்ப காலத்து துறவி, நமது புனிதர் பிலிப் பெனிசி (1233-1285) அவர்களின் சமகாலத்தினர் ஆவார். இவர் மரியின் ஊழியர் சபையின் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர் புனித ஏழு தந்தையர்கள் வாழ்ந்த காலத்திற்குப் பிறகு வாழ்ந்தவர். உபால்தோ, பிரபலமான பிளாரன்ஸிய அதிமாரி குடும்பத்தில் பிறந்தவர். அவர் சுமார் 1245 ஆம் ஆண்டு பிளாரன்சில் பிறந்தார். அந்தக் காலத்தின் குழப்பமான சூழலில் தனது இளமையைக் கழித்தார், மேலும் பல்வேறு முறைகேடுகள் மற்றும் கலவரங்களில் ஈடுபட்டார். 1280ஆம் ஆண்டு தொடக்கத்தில், பிளாரன்ஸ் நகரத்திற்கு வந்த புனித பிலிப் பெனிசி அவரை சந்தித்தார். அவர் உபால்தோவை மனமாற்றம் அடையச் செய்தார். பிறகு, உபால்தோ மரியின் ஊழியர் சபையின் துறவியாக மாறினார். மேலும், புனித பிலிப் பெனிசி இவரோடு நண்பராக மாறினார். எனவே, புனித பிலிப்போவுடன் அவர் சுற்றுப் பயணம் செய்து மரியின் ஊழியர் சபையின் பல்வேறு திருப்பணிகளைச் செய்தார். 1285 ஏப்ரல் 22ஆம் தேதி, தோடி மடத்தில் புனித பிலிப் மறைவதற்கான இறுதிநாளில் அவருடன் இருந்து, அவருக்கு ஆதரவளித்தார். இந்த தருணத்தில் நடந்த ஒரு நிகழ்வை வரலாறில் நாம் வாசிக்கிறோம். புனித பிலிப், தனது இறுதிநிமிடங்களில் மூன்று மணி நேரம் உணர்விழந்த நிலையில் இருந்தார். ஆனால் உபால்தோ அவர்கள் வந்தவுடன், புனித பிலிப் திரும்ப விழித்து கொண்டார். தனது நண்பனை கண்டு பிரியாவிடை பெற்றபின் புனித பிலிப் இறைவனடி சேர்ந்தார். பின்னர், உபால்தோ மொன்டே செனாரியோ (ஆழவெந ளுநயெசழை) மடத்திற்குத் திரும்பி, கடினமான தவ வாழ்க்கையில் தொடர்ந்தார். பல அதிசயங்களை நிகழ்த்தி, அவர் 1315 ஏப்ரல் 9ஆம் தேதி மறைந்தார். அவருடைய உடல், புனித ஏழு தந்தையர்களின் அருகில், மடத்தின் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. 1821 ஏப்ரல் 3ஆம் தேதி, திருத்தந்தை ஏழாம் பத்திநாதர் உபால்தோ அவர்களுக்கு முத்திப்பேறு பட்டம் அளித்தார்.









திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## எஸ்தர்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 4 |
| | 7 | | | | | | | 8 | |
| | | 11 | | | | | | | |
| | | | 12 | | | 13 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | 14 | | | | | |
| | | 10 | | | | | 9 | | |
| | 6 | | | | | | | 5 | |
| 2 | | | | | | | | | 1 |

**வலமிருந்து இடம்**

1) திராட்சை மது ……………. சட்டப்படி ஏற்புடையதாக இருந்தது. ஒருவரும் வற்புறுத்தப்படவில்லை

4) அன்றிரவு மன்னருக்குத் தூக்கம் வரவில்லை. எனவே அவர் தம் ஆட்சியின் குறிப்புகள் அடங்கிய ஏட்டைத் தம்மிடம் …………. வாசிக்குமாறு பணித்தார்.

5) மன்னர் …………. அரசி எஸ்தரை நோக்கி, இப்படிச் செய்தவன் எவன்? துன் இதயத்தில் செருக்குற்று இவ்வாறு செய்யும்படி நினைத்த அவன் எங்கே? என் வினவினார்.

8) அன்று ஆமான் மகிழ்வுடனும் உவகையுடனும் வெளியே சென்றான். ஆயினும் அரச வாயிலருகில் பணிபுரிந்த மொர்தக்காய் எழுந்து நிற்காததையும் தன்னைக் கண்டு ஒதுங்கி நில்லாததையும் பார்த்தபொழுது அவருக்கெதிராய் ஆமானின் நெஞ்சம் வெஞ்சினத்தால் ………

9) அவருடைய ……… வலிமைமிகு செயல்களும், அவர் மொர்தக்காய்க்கு அளித்த மேன்மையின் முழு விவரமும், மேதியா மற்றம் பாரசீக மன்னர்களின் குறிப்பேட்டில் எழுதப்பட்டுள்ளன அல்லவா?

**இடமிருந்து வலம்**

2) அகஸ்வேரது ……….. பன்னிரண்டாம் ஆண்டில், முதல் மாதமாகிய நீசானில், யூதரைப் கொன்று ஒழிப்பதற்கான மாதத்தையும், நாளையும் அறியுமாறு, ஆமானின் முன்னிலையில் பூர் என்ற சீட்டுப் போடப்பட்டது.

3) மன்னர் அகஸ்வேர், அண்ணகர்களின் வழியாய் இட்ட கட்டளைப் படி செய்ய மறுத்த அரசி வஸ்திக்குச் சட்டப்படி செய்ய ……….. என்ன? என்று வினவினார்.

6) அப்போது ……… மன்னரின் உதவியை நாட, யூதருக்கு எதிராயச் சதிசெய்த ஆமானின் தீவினை அவன் தலைமேல் விழுமாறு அவர் கட்டளை பிறப்பித்தார்.

7) இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் அறிந்த மொர்தக்காய் தம் ஆடைகளைக் ……… சாக்கு உடை அணிந்து, சாம்பல் பூசிக்கொண்டு, வெளியே நகரின் மையத்திற்குச் சென்று ஓலமிட்டு, மனங்கசிந்து அழுதார்.





## முதல் வாசக முன்னுரை

பாபிலோனிய அடிமைத் தளைக்குப்பின் இறைவன் இஸ்ரயேலுக்கு அளிக்கவிருக்கும் புதிய விடுதலைப் பயணம் பற்றி எசாயா இறைவாக்கினர் கூறுவது இன்றைய முதல் வாசகமாக தரப்பட்டுள்ளது. இறைவன் தருகின்ற புதிய விடுதலை மக்களுடைய இவ்வுலக வாழ்வையும் மறுவுலக வாழ்வையும் தழுவியது என்பது புலனாகிறத. இயேசுவின் உயிர்ப்பிலே நாம் அனைவரும் இப்புதிய பயணத்திலே பங்குபெறுவோம் என்ற நம்பிக்கையை நம்மில் விதைக்கும் இவ்வாசகத்தை வாசிக்கக் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

புனித பவுல் பிலிப்பியர்களின் நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்றும், அவர்கள் கிறிஸ்துவில் உறுதியானவர்களாக மாற்ற வேண்டும் என்பதற்காக தம்முடைய கடவுள் அனுபவத்தை பகிர்ந்துகொள்கிறார். கிறிஸ்துவின் பொருட்டு அனைத்தையும் குப்பையெனக் கருதுங்கள். அவர் நம்மையெல்லாம் நீதிமான்களாக மாற்றுவார் என்கின்ற உறுதிமொழியை புனித பவுல் அடிகளார் நமக்கு அளிக்கிறார். கிறிஸ்துவை அறிதலும் நம்பிக்கையோடு கிறிஸ்துவ வாழ்வை வாழ்வதுமே நமது வாழ்வின் இலட்சியமாக மாறிட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவியர்கள் அனைவரும் புனித பவுல் அடிகளாரைப் போல கிறிஸ்துவை அறியவும் அவரது போதனைகளை வாழ்வாக்கவும் தேவையான இறையருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா! நாங்கள் இத்தவக்காலத்தில் எங்களது குற்றங்களை நியாயப்படுத்தாமல், அவற்றை ஏற்றுக்கொண்டு மனம்மாறி உமது மன்னிப்பையும் இரக்கத்தையும் பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. பிறரை தீர்ப்பிடாதீர்கள் என்று மொழிந்த எம் இறைவா! நாங்கள் பிறரை தீர்ப்பிடாமல் எல்லோரையும் அன்பு செய்து சகோதர சகோதரிகளை போல பாவித்து ஒற்றுமையோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. துயருறுவோர்க்கு ஆறுதல் அளிக்கும் இறைவா! சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள், தனிமையில் இருப்பவர்கள், அநாதைகள், கைம்பெண்கள், முதியவர்கள் ஆகியோரை அன்பு செய்து அவர்களுக்கு நம்பிக்யையும் அன்யையும் விதைக்கின்றவர்களாக நாங்கள் அனைவரும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2.** மன்னிப்பின் இறைவா! இத்தவக்காலத்தில் ஒப்பரவு என்கிற அருள் அடையாளத்தின் வழியாக உமது இரக்கத்தையும் மன்னிப்பையும் நாங்கள் பெற்று புதுப்படைப்பாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3.** வாழ்வின் ஊற்றே எம் இறைவா! ஒவ்வொரு திருப்பலியும் எங்களை பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்டு சுதந்திர வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றது என்ற மறையுண்மையை விசுவசித்து ஞாயிறு மற்றும் கடன் திருப்பலிகளில் முழுமனத்தோடும் நம்பிக்கையோடும் பங்குபெற தேவையான அருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4.** அன்பின் இறைவா! இத்தவக்காலத்தில் எங்களிடையே இருக்கின்ற வெறுப்பு, பகைமை, கோபம் இவற்றை தவிர்த்து எங்களது அயலாரோடு ஒப்புரவாகி ஒற்றுமையோடும் சமாதனத்தோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### தவக்காலம் 5 ஆம் ஞாயிறு (06-04-2025)
### ஏசா 43:16-21; பிலி 3:8-14; யோவா 8:1-11

## திருப்பலி முன்னுரை

பிறரது குற்றங்களை பெரிதுபடுத்தி, பிறரைக் கெடுத்து சட்டத்தின் மூலம் மக்களை ஒடுக்கிய பரிசேயர்களைப் போல நாமும் வாழ்ந்தோமென்றால் இப்போதே மனம்மாறி வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இன்று நம்மில் பலரும் பரிசேயர்களைப் போல பிறருடைய குற்றங்களை மிகைப்படுத்திப் பேசி, அவற்றில் நம்முடைய குற்றங்களை மறைப்பதில் வல்லவர்களாக இருக்கிறோம். பொறாமையின் காரணமாக திட்டமிட்டு, பிறரை அழிக்கத் துடிக்கும் எத்தனையோ நபர்கள் இன்றும் நம்மில் பலர் உண்டு. பரிசேயர்களின் பாவங்களை இயேசு நன்கு அறிந்திருந்தாலும், அவற்றிற்காக அவர் அவர்களைத் தீர்ப்பிடவில்லை. விபச்சாரப் பெண்ணை மன்னித்தது போல அவர்களையும் மன்னிக்கத் தயாராகவே இருந்தார். ‘உங்களுள் பாவமில்லாதவர் முதல் கல் எறியட்டும்’ என்று இயேசு சொன்னது அவர்களது பாவங்களைச் சுட்டிக்காட்டி அவர்களைத் தீர்ப்பிட அல்ல, மாறாக தாங்கள் மறைத்து வைத்திருக்கும் பாவங்களை ஏற்றுக்கொண்டு, மனம்திரும்பி கடவுளிடம் வர வேண்டும் என்பதற்காகவே. எனவே இத்தவக்காலத்தில் நாமும் நமது குற்றங்களை நியாயப்படுத்தாமல் நமது தவற்றை ஏற்று வருந்தும்போது கடவுள் நமது பாவங்களை மன்னிக்கின்றார் என்கின்ற நம்பிக்கையோடு இறைவனது மன்னிப்பையும் இரக்கத்தையும் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.





11) மன்னருக்கும் ஏனைய தலைவர்களுக்கும் முன்பாக மெமுக்கான் கூறியது: அரசி வஸ்தி மன்னருக்கு எதிராக மட்டுமன்றித் தலைவர் அனைவர்க்கு எதிராகவும், அகஸ்வேரின் ஆட்சிக்குட்பட்ட அனைத்து மாநில மக்களுக்கு …………. தவறிழைத்துவிட்டாள்.
12) மொர்தக்காய் அரசவாயிலருகில் பணிபுரிந்த நாள்களில், பிகதான், தெரேசு, என்ற இருவர் சினமுற்று மன்னர் அகஸ்வேரைத் …………. வகை தேடினர்.
14) …………… தம் அரசின் செல்வச் செழிப்பினையும், தம் மாண்பின் மேன்மை மிகு பெருமையையும் நூற்றி எண்பது நாள்கள் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்.

**மேலிருந்து கீழ்**

3) அதற்கு எஸ்தர் என் விண்ணப்பமும் வேண்டுகோளும் இதுவே: மன்னரின் கண்களில் எனக்குத் தயவு கிடைத்தால் மன்னரின் பார்வையில் இது நலமெனத் தோன்றினால், மன்னரும் ஆமானும் நான் நாளைய தினமும் உங்களுக்காய் ஆயத்தம் செய்யும் விருந்திற்கு வருகை தருமாறு …………… அவ்வமயம் மன்னரின் வார்த்தையின்படி என் விண்ணப்பத்தைத் தெரிவிப்பேன் என்ற பதிலளிப்பாள்.
4) அவ்விளம் பெண் ஏகாயின் கண்களுக்கு இனியவளெனக் காணப்பெற்று இவரது தயவைப் பெற்றார். அவரும் அவருக்குத் தேவையான அழகு சாதனங்களை உடனே தந்து, அரண்மனையில் சிறந்த செவிலியர் எழுவரையும் …………..
7) உள்முற்றத்தில் நின்ற அரசி எஸ்தரைக் கண்டதும் மன்னரின் கண்களில் அவருக்குத் தயவு
…………..
8) மன்னரின் வார்த்தையும் …………. எந்தெந்த மாநிலங்களை அடைந்தனவோ, அங்கெல்லாம் இருந்த யூதரிடையே பெரும், புலம்பரும், நோன்பும், கண்ணீரும், அழுகையும் விளங்க, அனைவரும் சாக்கு உடை அணிந்து சாம்பல் பூசிக் கொண்டனர்.
11) அரசி வஸ்தியின் நடத்தை எல்லாப் பெண்களுக்கும் தெரியவரும். அவர்கள் பார்வையில் அவர்களின் கணவர் இழிவுப்படுத்தப்படுவர். ஏனெனில் மன்னர் அகஸ்வேர் அவளைத் தம்முன் வருமாறு பணித்தும்கூட அவர்முன் அவள் வரவில்லையே! ……………
12) அதற்கு எஸ்தர், மன்னர் விரும்பினால் இன்று நான் வைத்திருக்கும் விருந்திற்குத் ……….. ஆமானும், வருகை தர வேண்டும் என்று பதிலிறுத்தார்.
13) இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் அறிந்த மொர்தக்காய் தம் ஆடைகளைக் கிழித்து சாக்கு உடை அணிந்து, சாம்பல் பூசிக்கொண்டு, வெளியே நகரின் மையத்திற்குச் சென்று ஓலமிட்டு, மனங்கசிந்து …………..

**கீழிருந்து மேல்**

1) …………… பெண் ஏகாயின் கண்களுக்கு இனியவளெனக் காணப்பெற்று இவரது தயவைப் பெற்றார்.
2) மொர்தக்காய் தமக்கு நேரிட்ட அனைத்தைப்பற்றியும், யூதரை அழிக்கும்படி அரச கருவூலத்தில் சேர்ப்பதற்காக ……… வாக்களித்த வெள்ளி பற்றியும் அவருக்குத் தெரிவித்தார்.
5) ஒவ்வொரு மாநிலத்திலும், ஒவ்வொரு நகரிலும், எங்கெல்லாம் மன்னரின் இந்த வாக்கும் நியமமும் எட்டினவோ, அங்கெல்லாம் வாழ்ந்த யூதர் மகிழ்ந்து களிகூர்ந்தனர். அந்நாள் விருந்தாடும் விழா நாளாக விளங்கியது. யூதரைப்பற்றிய ……….. பிறர்மீது விழ, நாட்டு மக்களில் பலர் யூதாராயினர்
6) அவர் தம் அரசின் செல்வச் செழிப்பினையும், தம் மாண்பின் மேன்மை மிகு பெருமையையும் நூற்றி …………… நாள்கள் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்.
9) மொர்தக்காயைப் பற்றிய அச்சம் மன்னரின் அலுவல்களில் உதவி செய்கின்ற மாநிலத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், ஆளுநர்கள் அரச ஊழியம் செய்வோர் அனைவரையும்……….. அவர்களும் யூதருக்கு உதவி செய்யலாயினர்.
10) மன்னர் அகஸ்வேரின் மாநிலங்கள் அனைத்திலும், …………. என்ற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாம் நாளன்று, ஒரே நாளில் இவ்வாறு செய்வதென அறிவிக்கப்பட்டது.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-03-2025

# அன்பே மனிதம் 22



கலைச்சுடர் முனைவர். ஜோ.விண்ணரசன், மேல்வழி

அன்பே மனிதம் அறமே கணிதம்
வாழும் மனிதன் உணர்ந்து நடந்தால்
அதுவே புனிதம் இகமே நிறையும்

மெழுகைப் போல எரிந்து உருகி
குறையத் தேவை இல்லை
உப்பைப் போல கரைந்து அழிந்து
முறையத் தேவை இல்லை
பொன்னோ பொருளோ வாரி வழங்கி
திரியத் தேவை இல்லை
காபோ மலையோ ஓடி அலைந்து
தேடத் தேவை இல்லை
தன்னைப் போல பிறரை நினைத்து
வாழ்தல் ஒன்றே உலகில் போதும்
மனிதம் அதிலே நினைத்து வாழும்

வேதம் சொல்லி பூஜைப் பண்ணும்
சோடனைத் தேவை இல்லை
கற்றுத் தெளிந்து விற்பனை ராகும்
கூடமும் தேவை இல்லை
ஒடுக்கி அடக்கி அடித்துக் கொள்ளும்
ஒறுத்தல் தேவை இல்லை
கடுக்க நடந்து பசித்து இருந்து
வருத்த தேவை இல்லை
இனிய சொற்கள் பேசி மகிழ்ந்து
கெடுமை எண்ணம் தூக்கி எறிந்து
வாழ்தல் ஒன்றே உலகில் போதும்
மனிதம் அதிலே செழித்து ஓங்கும்.





உண்மை, ‘பாவம் செய்தோம் இறைவா, எங்கள் மேல் இரக்கமாயிரும்’ என்று கூறி எப்போது இறைவன்பால் திரும்புகிறோமோ அப்போதே ஓடோடி வந்து அவர் நமக்கு உதவுவார். நாம் ஒரு அடி முன் எடுத்து வைத்தால் அவர் பல அடிகள் முன் எடுத்து வைத்து நம்மை எதிர்கொண்டு மன்னிப்பு வழங்குவார். மறுபடியும் தம் அன்பிலே நம்மை இணைத்துக் கொள்வார். மன்னிப்பதில் இறைவன் காட்டும் ஊதாரித்தனத்தை லூக்கா இன்றைய நற்செய்தியில் விளக்குகிறார். மனமாற்றமடைய நாம் கடவுளின் மாபெரும் இரக்கத்தை இத்தவக்காலத்தில் எண்ணிப் பார்க்க அழைக்கப்படுகிறோம். ‘ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர், அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை தண்டிப்பதில்லை’ என்ற திருப்பாடலின் வரிகளை விசுவசித்து மனம்மாறி கடவுளோடு ஒப்புரவாகத் தேவையான இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

முதன் முதலாக பாஸ்கா விழாவைக் கானான் நாட்டில் இஸ்ராயேல் மக்கள் கொண்டாடிய நிகழ்வை இன்றைய முதல் வாசகம் எடுத்தியம்புகிறது. பாஸ்கா விழாவானது எகிப்தியரின் தலைப்பேறுகளை கொன்றொழித்த இறைவன் தன் மக்களாகிய இஸ்ரயேலருக்கு யாதொரு தீங்கும் செய்யாது பாலும் தேனும் பொழியும் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட நிகழ்வை நினைவுறுத்தும் விழா. ஒவ்வொரு திருப்பலியுமே நமக்கு ஒரு பாஸ்கா விழாதான். நாம் பங்கெடுக்கும் ஒவ்வொரு திருப்பலியும் நம்மை பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்டு தூய வாழ்வுக்கு அழைத்து செல்கிறது என்ற மறையுண்மையை உணர்ந்து இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவன் கடவுளோடு ஒப்புரவானவன், கடவுளோடு சமாதான நிலையில் வாழ்பவன். அவன் புதுப்படைப்பு. கிறிஸ்தவ வாழ்வு அவனுக்கு கடவுள் கொடுத்த உரிமை. அவ்வுரிமையோடு கூடிய கடமையும் அவனுக்கு உண்டு. இந்த ஒப்புரவை, சமாதானத்தை அவன் வாழ்வதோடு, பிறருக்கும் அளிக்க வேண்டும் என்பதை எடுத்தியம்பும் இவ்விரண்டாம் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. படைப்பின் நாயகனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்மோடும் அயலாரோடும் நல் ஒப்புரவை ஏற்படுத்தி சமாதானத்தோடும் மகிழ்ச்சியோடும் வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இஸ்ராயேல் மக்கள் இறைவனிடமிருந்து எண்ணற்ற நன்மைகளைப் பெற்றனர். எனினும் அவர்கள் தீயவற்றையே நாடினர், சிலைவழிபாட்டில் ஈடுபட்டனர், வேசித்தனம் செய்தனர். இவ்வாறு ஆண்டவரை சோதித்தனர். இறைவனுக்கு விரோதமாக முனுமுனுத்தனர். இதன் காரணமாக அழிவுற்றனர். இவ்வாறு நாமும் நம் வாழ்வில் தீச்செயல்கள் புரிந்து இறைவனின் கோபத்திற்கு ஆளாகக் கூடாதென புனித புவுலடியார் எச்சரிக்கிறார். இத்தவக்காலத்தில் தீச்செயல்களை தவிர்த்து, இறைவனின் பிள்ளைகளாக வாழ அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்மைப்பற்றிய சரியான புரிதலைக் கொண்டு உமது அன்பையும் மாண்பையும் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்
2. இரக்கத்தின் இறைவா! இத்தவக்காலத்தில் நாங்கள் அனைவரும் உண்மையான மனமாற்றம் பெற்று உம்மை எங்களது வாழ்வின் மையமாகக் கொண்டு தூய வாழ்வு வாழ எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. மன்னிப்பின் இறைவா! இத்தவக்காலத்தில் நாங்கள் அனைவரும் உம்மைப் போன்று பிறரை அன்பு செய்யவும், மன்னிக்கவும் எங்களுக்கு போதுமான வலிமையைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. துன்பங்களில் துணைவரும் எம் இறைவா! எங்களது சோதனை மற்றும் துன்ப காலங்களில் எங்களோடு இணைந்து பயணிக்கின்றீர் என்பதை உணர்ந்து வாழவும், விசுவாசத்தில் திடம்பெற்று உம்மை என்றும் போற்றி புகழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### தவக்காலம் ௪ ஆம் ஞாயிறு (30-03-2025)

**யோசு 5:9,10-12; 2கொரி 5:17-21; லூக் 15:1-3,11-32**

## திருப்பலி முன்னுரை

தவக்காலம் மனமாற்றத்தின் காலம், மன்னிப்பின் காலம். நம்முடைய பலவீனங்கள் நம்மை அடிமைப்படுத்துவதை அனபவ வாயிலாக அறிவோம். நாம் பாவம் செய்யக்கூடாது என்பதே இறைவனின் விருப்பமாயினும், பாவத்திற்கு அடிமைகளாகிவிட்ட நிலையிலே இறைவன் நம்மைக் கைவிடுவதில்லை. பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி அழுத்தம் திருத்தமாகக் கூறப்படும் ஒரே





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

### தவக்காலம் 2 ஆம் ஞாயிறு (16-03-2025)

**தொநூ 15:5-12, 17-18; பிலி 3:17-4:1; லூக் 9:28-35**

## திருப்பலி முன்னுரை

மனித வாழ்வின் மகிழ்ச்சிக்கும் நிறைவுக்கும் விசுவாசம் முக்கியமானது என்கிறது இன்றைய வழிபாடு. இறைவனைவிட மேலானதும் உயர்வானதும் எதுவும் தன்னுடைய வாழ்வில் இல்லை என்று செயல்படுவதே உண்மையான விசுவாசம். ஆபிரகாம் தன் உயிரை விட மேலாகக் கருதி அன்பு செய்தது தன் மகன் ஈசாக்கை. ஆனால் அந்த மகனையும் கடவுளின் சொற்படி எரிபலியாக்க முனைந்தது கடவுள் மீது அவர் கொண்ட விசுவாசத்தைக் காண்பிக்கிறது. எனவேதான் 'விசுவாசத்தின் தந்தை' என அவர் அழைக்கப்படுகின்றார். இத்தகைய ஆழமான விசுவாசம் தான் அதாவது உயிரைவிட மேலாக இறைவனுக்கும் அவரது மதிப்பீடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பண்புதான் நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய ஆழமான விசுவாசம் உள்ளவர்கள் மட்டுமே துன்பத்தை தாங்குவதற்காக வல்லமையை இறைவனிடமிருந்து பெறுகிறார்கள் என்கின்ற செய்தியை இன்றைய வாசகங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. ஆபிரகாம் தன்னுடைய மகனை மோரியா மலையில் பலியாக்க முனைந்தது போல தன் இறைத்தந்தையும் தன்னை கல்வாரி மலையில் பலியாக்க போகிறார் என்பது இயேசுவுக்கு நிச்சயம் தெரிந்திருந்தது. மனிதர்களுக்கு மீட்புத் தரும் பயணத்தில் சிலுவைச் சாவும், வேதனைகளும் கட்டாயம் என்பதை தாபோர் மலையில் நடந்த உருமாற்ற அனுபவத்தின் வழியாக வெளிப்படுத்துகிறார். நமது வாழ்விலும் நமது விசுவாசத்தின் பொருட்டு துன்பங்கள் வந்தாலும் அத்துன்பங்களை நாடுவதற்கான வல்லமையை கடவுள் தந்துகொண்டே இருக்கிறார் என்பதை உணர்ந்து இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

மனித அறிவிற்கு அப்பாற்பட்ட முறையில் ஆபிரகாம் இறைவனின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்கிறார். ஆபிரகாமின் கீழ்படிதலுக்குப் பரிசாக ஆண்டவர் அவரோடு உடன்படிக்கை செய்து கொள்கிறார். இறைவனின் ஆசி, இறைவனின் பிரசன்னம் நாம் அவருக்குப் பணிந்து நடக்கும் போது நமக்குக் கிடைக்கும். பிறர் மூலமாகவோ, எதிர்பாரா நிகழ்வுகள் வழியாகவோ இறைவனின் ஆசி நம்மை வந்தடையும் என்பதை உணர்த்தும் இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஒரு விசுவாசமற்ற மனிதனும், ஒரு விசுவாசமுள்ள மனிதனும் துன்பங்களை சந்திப்பதிலுள்ள வித்தியாசத்தை புனித பவுல் அடிகளார் சுட்டிக்காட்டுகின்றார். விசுவாசமற்ற மனிதன் தன் பலத்தை மட்டுமே நம்பி துன்பங்களை எதிர்கொள்கிறார். ஆனால் விசுவாசமுள்ள மனிதரோ தனது பலத்தைவிட இறைவனின் பலம் தன்னோடு இருப்பதை உணர்ந்து துன்பங்களை எதிர்கொள்கிறார். எனவே அவர்களால் துன்பங்கள் மத்தியிலும் உறுதியோடு தங்களது வாழ்க்கையை வாழ முடிகின்றது. நாமும் நமது துன்பங்களில் இறைவனது துணை வேண்டுவோம் என்ற உறுதியோடு இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களது விசுவாச வாழ்வில் சந்திக்கின்ற எல்லா துன்பங்களையும், சவால்களையும் தூய ஆவியாரின் துணையோடு எதிர்கொள்ள தேவையான அருளை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. சுகமளிக்கும் இறைவா! இக்கொரோனா தொற்று காலத்திலே நாங்கள் ஒருபோதும் உம்மை விட்டு விலகிச் செல்லாமல் உம்மீது ஆழ்ந்த விசுவாசம் கொண்டு உம்மோடு இணைந்து பயணிக்க எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. இரக்கமே உருவான எம் இறைவா! இத்தவக்காலத்திலே நாங்கள் அனைவரும் செபத்திலும், தவமுயற்சியிலும், அறச்செயல்கள் செய்வதிலும் ஈடுபட்டு உமது இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





4. எங்கள் அனைவரையும் மனமாற்றம் பெற அழைப்பு விடுக்கும் எம் இறைவா! நாங்கள் உமது பாடுகளையும் இறப்பையும் தியானிதது அதனால் மனமாற்றம் பெற்று உம்மில் இணைந்து வாழ எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## தவக்காலம் 3 ஆம் ஞாயிறு (23-03-2025)

**விப 3:1-8,13-15; 1கொரி 10:1-6,10-12; லூக் 13:1-9**

## திருப்பலி முன்னுரை

கடவுளைப் பற்றி நாம் கொண்டிருக்கின்ற எண்ணங்களும், புரிதலும் நமது வாழ்வை வெகுவாக பாதிப்பதால் அவரைப் பற்றி நாம் தெளிவான மற்றும் சரியான புரிதல் கொண்டிருப்பது அவசியம் என்பதை சுட்டிக்காட்டுகின்றது இன்றைய வழிபாடு. ஒரு சிலருக்கு கடவுள் மன்னிப்பவராகவும், இரக்கமுள்ளவராகவும் தெரிகின்றார். வேறு சிலருக்கோ கடவுள் கண்டிப்பானவராக, பழிவாங்கக்கூடியவராக தெரிகிறார். ஆனால் இயேசு கிறிஸ்து இதற்கு முற்றிலும் மாறாக வித்தியாசமான கடவுளை இரக்கமுள்ள, மன்னிக்கின்ற, உணர்வுள்ள, பாசமுள்ள, பாவிகளை அன்பு செய்கின்ற, சட்டங்களைத் தாண்டி செயல்படுகின்றவராக நமக்கு காண்பிக்கின்றார். அத்தி மரத்தை அழிக்காமல் அதற்கு கால நீட்டிப்பு தருகின்ற தோட்டக்காரராக கடவுளை புனித லூக்கா தனது நற்செய்தியில் சுட்டிக்காட்டுகின்றார்.

இத்தவக்காலத்திலே, கடவுள் நமது மனம்மாற்றத்திற்காக நமது வாழ்நாட்களை நீடிக்கச் செய்கிறார். எனவே நாம் நமது பாவத்தை ஏற்று மனம்வருந்தி வருகின்ற போது நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்கின்ற கடவுளாக தம்மை வெளிப்படுத்துகின்றார். அத்தகைய இறைவனின் அன்பையும், மன்னிப்பையும், இரக்கத்தையும், பரிவையும் பெற நாம் மனம்மாற்றம் பெற இறையருள் வேண்டி இத்தியாக பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

எரியும் முற்செடியில் இறைவன் மோசேயுக்குக் காட்சி அளித்தது இன்றைய முதல் வாசகமாக அமைகின்றது. உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள் என்று தம்மை வெளிப்படுத்தி அவர் நம் எல்லோருக்கும் தந்தை என்பதை வெளிப்படுத்துகிறார். 'இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே' என்று சொல்லி நம்மோடு நம்முடைய துன்ப துயரங்களில் இணைந்திருப்பவர். நமக்காக செயல்படுபவர் என்பதையும் வெளிப்படுத்துகிறார். அவரோடு நாமும் இணைந்து பயணிக்க மோசேயைப் போல பாவம் என்கிற மிதியடிகளைக் களைந்துவிட்டு இறைவனிடம் நெருங்கி வர அருள் வேண்டி இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.